**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**

| | | |
|---|---|---|
| CC. | : | 105 / 2024 |
| Deposition of Witness for | : | PW. 1 (LW-1) |
| Name | : | மணிவேல் |
| Father's Name | : | ராமலிங்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர் |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 24th day of November 2025.**

**முதல் விசாரணை:**

நான் கந்தசாரபட்டியில் குடியிருக்கின்றேன். நான் விவசாயம் செய்து வருகின்றேன். இந்த வழக்கில் இறந்துபோன ராஜம்மாள் என்பவர் எனது தாயார். 01.12.2022-ம் தேதி காலை எனது தாயார் 100 நாள் வேலை திட்டத்தில் வேலைக்கு சென்றிருந்தார். அப்போது வரப்பட்டி சாலையில் பி.ஆர்.தோட்டம் அருகில் இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக பழனிச்சாமி என்பவர் செல்போன் மூலம் எனக்கு தகவல் தெரிவித்தார். எனது தாயாரை அரசு மருத்துவமனையில் அனுமதித்து இருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது காயங்கள் அதிகமாக இருந்ததால் அவரை மேல் சிகிச்சைக்காக கோவை பி.எஸ்.ஜி மருத்துவமனைக்கும் அதன் பின்பு கே.எம்.சி.உறச் மருத்துவமனையிலும் சேர்த்து சிகிச்சை எடுத்தோம். அதன் பின்பு கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். விபத்து சம்பந்தமாக நான் வெள்ளியணை

காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். பின்பு எனது தாயார் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார்.

ஆவணம் குறியிட வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |